பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 11 செவ்வாய்க்கிழமை 25.03.2025 | அதிர்வு 234

## இலங்கை - இந்திய மீனவர் நாளை வவுனியாவில் பேச்சு

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் இலங்கை மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய மீனவர் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர். 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# யாழ். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அர்ச்சுனா - இளங்குமரன் வாய்த்தர்க்கம்!

## ஆத்திரமடைந்த சிறீதரன் வெளிநடப்பு

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

தனிப்பட்ட அரசியல் விவகாரங்கள் மற்றும் தனிநபர் அவதூறுகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருக்கு இல்லாமையைச் சுட்டிக்காட்டி கூட்டத்தில் இருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வெளியேறினார்.

இன்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தனிப்பட்ட விடயங்களை 02



04

# தேசபந்துவைப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை சபாநாயகரிடம் சமர்ப்பிப்பு

தேசபந்து தென்னக்கோனைப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரால் இந்தப் பிரேரணை கையளிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரேரணையில் தேசிய மக்கள் சக்தியை அங்கத்துவப்படுத்தும் 115 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர் என்று பிரதி அமைச்சர் எரங்க குணசேகர தெரிவித்துள்ளார்.



# நால்வர் மீதான பிரித்தானியாவின் தடை நீதிக்கான தேடலின் நம்பிக்கைக் கீற்றே!

## தமிழரசின் எம்.பி. சிறீதரன் தெரிவிப்பு





இலங்கையில் தமிழர்கள் மீதான இன அழிப்பு யுத்தத்தில் ஈடுபட்ட இலங்கை ஆயுதப்படையின் முன்னாள் தலைவர் சவேந்திர சில்வா, கடற்படை முன்னாள் தளபதி வசந்த கரன்னகொட, இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜகத் ஜயசூரிய மற்றும் இலங்கை இராணுவத்தின் சார்பாகச் செயற்பட்ட துணை இராணுவக் குழுவான கருணா குழுவின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் மீது பிரித்தானியா விதித்துள்ள தடை ஈழத்தமிழர்களின் நீதிக்கான தேடலின் நம்பிக்கைக் கீற்று எனவும், அந்த அறிவிப்பை தாம் வரவேற்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ள சிறீதரன் எம்.பி, இந்த விடயம் சார்ந்து அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறவுள்ள ஜெனிவா அமர்வுக்கு முன்னதாக, இனப்படுகொலையின் பங்குதாரர்களான நால்வர் மீது பிரித்தானிய அரசு விதித்துள்ள பயணத் தடை, காலம் தாழ்த்தியாவது தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை மீள அரும்பச் செய்திருக்கின்றது.

இலங்கையில், குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழர்கள் மீது பேரினவாத அரசு வலிந்து நடத்திய போரின்போது மோசமான மனித உரிமை மீறல்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகளில் ஈடுபட்ட இந்த நான்கு பேர் மீதும் பிரித்தானிய அரசு விதித்திருக்கும் தடையையும், சொத்து முடக்க அறிவிப்பையும், சர்வதேச நீதிகோரும் பயணத்தில் தமக்கு கிடைத்திருக்கும் ஒரு சிறிய நம்பிக்கை ஒளிக்கீற்றாகவே ஈழத்தமிழர்கள் பார்க்கின்றார்கள்.

எண்பது வருடங்களுக்கு மேலாக கேட்பாரற்று படுகொலை செய்யப்பட்ட தமிழ்த்தேசிய இனத்தின் எண்ணங்களுக்கும் இறந்துபோன ஆத்மாக்களுக்கும் இந்தத் தடை அறிவிப்பு தமக்கான நீதியின் கதவு திறக்கும் என்ற நம்பிக்கையைக் கொடுத்திருக்கின்றது.

காலனித்துவ ஆட்சி முடிவில், சுதேசிகளான தமிழர்களின் இறைமையை பிறிதோர் இனத்தவரிடம் ஒப்படைத்துச் சென்றமை வரலாற்றுத் தவறு என்பதை உலகம் இப்போதாவது உணரத்தலைப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.” - என்றுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**யாழ். ஒருங்கிணைப்பு...**

முன்னிறுத்தி இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதால் சில நிமிடங்கள் அமளிதுமளி ஏற்பட்டது.

வலிகாமம் வடக்கில் முன்னெடுக்கப்படும் மின் இணைப்பு விடயம் தொடர்பில் விவாதம் முன்வைக்கப்பட்டபோது ஆளும் தரப்பு நாடளுமன்ற உறுப்பினரான க.இளங்குமரன் மற்றும் சுயேச்சைக் குழுவின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா இடையே ஏற்பட்ட வாக்குவாதம் அவர்களது தனிப்பட விடயங்களை முன்னிறுத்தியதாக மாறியது.

குறிப்பாக இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் காதல் விடயங்கள், பெண்களை ஏமாற்றிய செய்திகள், நிதி மோசடிகள் உள்ளிட்ட தனிப்பட்ட விடயங்களை முன்னிறுத்தி நூற்றுக்கணக்கான அதிகாரிகள் முன்னிலையில் குடும்பச் சண்டையிட்டனர்.

இந்நிலையில், குறித்த விவாதத்தை இடைநிறுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அமைச்சர் இ.சந்திரசேகரிடம் வலியுறுத்தினார்.

ஆனால், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் மேற்படி இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்டுப்படுத்த முடியாது ஆளுமையற்றவராகக் காணப்பட்டார்.

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் ஆளுமையற்ற நிலையை அவதானித்த சிறீதரன் எம்.பி. கூட்டத்தை விட்டு வெளியேறிச் சென்றார்.

அரச அதிகாரிகளை அவமானப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுகின்றமையாலும், இவர்கள் சபை நாகரிமற்ற வகையில் தொடர்ந்தும் தர்க்கம் புரிகின்றமையாலும் தான் கூட்டத்தை விட்டு வெளியேறிச் செல்வதாக இதன்போது சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

இதன்பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களான அர்ச்சுனா மற்றும் இளங்குமரன் ஆகியோருக்கிடையிலான வாய்த்தர்க்கம் முற்றி, கடும் குழப்ப நிலை ஏற்பட்டதையடுத்து, கூட்டத்தின் தலைவர் அமைச்சர் சந்திரசேகரரால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமையால் கூட்டம் இடை நிறுத்தப்பட்டது.

**இலங்கை...**

இதற்கமைய வவுனியாவில் நாளை இலங்கை - இந்திய மீனவர்கள் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஜேசுராஜா, ஆல்வின், சகாயம், ஜஸ்டின், ஜெர்மனியஸ் ஆகியோர் கொண்ட 5 பேர் கொண்ட குழு இன்று செவ்வாய்க்கிழமை விமான மூலமாக யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தது.

இதில் ஏற்கனவே நாகபட்டினத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் இங்கு இருப்பதால் அவருடன் சேர்ந்து 6 பேர் கொண்ட குழு நாளை புதன்கிழமை வவுனியாவில் உள்ள தனியார் விடுதியில் இரு நாட்டு மீனவர்கள் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தை நாளை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது

இலங்கை மீனவர்கள் சார்பில் சுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), மரியராசா (முல்லைத்தீவு), ஆலம் (மன்னார்), பிரான்சிஸ் (கிளிநொச்சி), அந்தோனிப்பிள்ளை (கிளிநொச்சி), சங்கர் (மன்னார்), இராமச்சந்திரன் (யாழ்ப்பாணம்), அன்னராசா (யாழ்ப்பாணம்), வர்ணகுலசிங்கம் (யாழ்ப்பாணம்) உள்ளிட்ட 12 பேர் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்கின்றனர்.

இரு நாட்டு மீனவர் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு எட்டப்படுவது தொடர்பாக முதல் கட்டமாக இலங்கை - இந்திய மீனவர்களிடையே மீனவர்களின் சொந்த முயற்சியில் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து கடந்த செவ்வாய்க்கிழமை முடிவு செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்னக்கோனுக்கு மூன்று வேளையும் வீட்டிலிருந்து உணவு



## சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு வீட்டிலிருந்து கொண்டுவரப்படும் உணவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலை ஆணையாளர் காமினி பீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி மாத்தறை, வெலிகம – பெலேன பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

தேசபந்து தென்னக்கோன் நீதிமன்ற உத்திரவை அவமதித்து சுமார் 20 நாட்கள் தலைமறைவாக இருந்த நிலையில், கடந்த புதன்கிழமை காலை மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்ததையடுத்து ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தேசபந்து தென்னக்கோனின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு அவரைப் பல்லேகெலே, தும்பர சிறைச்சாலையில் உள்ள சிறைக்கூண்டில் விசேட பாதுகாப்புடன் தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் தற்போது அவருக்கு வீட்டிலிருந்து கொண்டுவரப்படும் உணவுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





# 14 வயது சிறுமியை மின்கம்பத்தில் கட்டி வைத்து கொடூர தாக்குதல்!

## வடமராட்சி கிழக்கில் சம்பவம்

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். வடமராட்சி கிழக்கில் மின் கம்பத்தில் சிறுமியைக் கட்டி வைத்து தாக்கி, சித்திரவதை புரிந்த குற்றச் சாட்டில் பெண் ஒருவரைக் கைது செய்வதற்கு மருதங்கேணி பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

குடத்தனை பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுமி ஒருவர், தனது வீட்டுக்கு அருகில் உள்ள கடையில் பொருட்களை வாங்கச் சென்ற சமயம், கடையில் இனிப்புப் பொருட்களைத் திருடினார் என கடை உரிமையாளரான பெண், சிறுமியை மின் கம்பத்தில் கட்டி வைத்து, தாக்கி சித்திரவதை செய்துள்ளார்.

பின்னர், சிறுமி காயங்களுடன் வீட்டுக்குச் சென்ற நிலையில், வீட்டார் சிறுமியை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

சிகிச்சையைத் தொடர்ந்து, சட்ட வைத்திய அதிகாரி சிறுமியை சோதனை செய்த போது, சிறுமியின் உடலில் அடிகாயங்கள் இருந்ததுடன், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமைக்கான காயங்களும் காணப்பட்டுள்ளன.

அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு சட்ட வைத்திய அதிகாரி அறிவுறுத்தியதை அடுத்து, தாக்குதலாளியான கடை உரிமையாளரான பெண்ணைக் கைது செய்வதற்குப் பொலிஸார் அவரது வீட்டுக்கு சென்ற சமயம், அவர் தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கையை எடுத்துள்ளனர்.





# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் மற்றும் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பொதுமக்களின் பிரச்சினைகள், தேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலர்கள், அரச திணைக்களங்களின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



















## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# தேர்தல் முறைமை மாற்றம்

உள்ளூராட்சி தேர்தலுக்கான நடவடிக்கைகள் மும்முரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகள் தொடர்பில் உயர் நீதிமன்றம் அடுத்து வரும் நாள்களில் அல்லது வாரங்களில் முடிவுகளை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நீதிமன்ற உத்தரவு வந்தால் சில, பல உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் தள்ளிப் போகக் கூடிய வாய்ப்பு உண்டு.

ஆயினும், பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் மே 6ஆம் திகதி நடைபெறும். மே இரண்டாம் வாரத்தில் புதிய நிர்வாகங்கள் பொறுப்பெடுக்கக்கூடிய சூழ்நிலை காணப்பட்டாலும் அது பெரும்பாலான சபைகளில் சாத்தியமா என்ற கேள்வி எழுகின்றது.

தற்போதைய தேர்தல் முறைமையின் கீழ் - வட்டாரக் கட்டமைப்பு மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவம் ஆகியவை கலந்த முறைமையின் கீழ் - நடைபெறும் தேர்தலில் பெரும்பாலும் பல சபைகளிலும் தனியாக ஒரு கட்சி அல்லது கூட்டு பெரும் பான்மை பெறுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு என்று சுட்டப்படுகின்றது.

தற்போதைய முறைமையின் கீழ் 2018 இல் நடத்தப்பட்ட முதலாவது உள்ளூராட்சி தேர்தலில் இதே போன்ற நிலைமைதான் ஏற்பட்டது. பல சபைகள் நீண்ட இழுபறிகளின் பின்னர் தம்முடைய நிர்வாகக் காலத்தை முடித்துக் கொண்டன. இப்போதும் தெரிவாகின்ற சபைகள் இதே போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போதைய தேர்தல் முறைமை விகிதாச்சாரப்பிரதிநிதித்துவத்துவத்தில் மக்கள் பங்களிப்பை துல்லியமானதாக வெளிப்படுத்தினாலும் கூட, அதனால் தான் எந்த சபையிலும், எந்த கட்சியும் அல்லது தரப்பும் பெரும்பான்மை பெற முடியாத நிலைமை ஏற்படுகின்றது என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

இப்படி ஒரு தரப்பும் பெரும்பான்மை பெற முடியாத நிலையில் உள்ளூராட்சி சபை நிர்வாகத்தை கொண்டு நடத்துவது சிக்கலாகவும் இழுபறியாகவும் இருக்கும். ஆயினும், ஜனநாயக தேர்தல் முறைமையில் உயரிய பிரதிநிதித்துவ முறைமையை இந்தத் தேர்தல் முறை கொண்டிருப்பதை மறுப்பதற்கு இல்லை.

இப்போதைய தேர்தல் முறையை மாற்றுவதாயின் அதற்கு நாடாளுமன்றத்தில் பல கட்சிகள் மத்தியில் ஒரு இணக்கமான நிலை ஏற்பட வேண்டும். ஆயினும் நாடாளுமன்றத்தில் தனித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்திருக்கும் இந்த அரசாங்கம்தான் நினைத்தால் தன்பாட்டில் இந்தத் தேர்தல் முறைமையை மாற்றக் கூடும். அதற்கான சட்டங்களை மாற்றி அமைக்க கூடும். ஆயினும் மக்கள் பிரதிநிதித்துவத்தை கீழ் மட்டத்தில் - உள்ளூராட்சி மன்றங்கள் மட்டத்தில் - ஒழுங்குபடுத்தும் ஏற்பாட்டைப் பல கட்சிகளின் இணக்கம் இல்லாமல் ஆளும்தரப்பு மாத்திரம் ஒரு முடிவெடுத்து தீர்மானிப்பது எதிர்காலத்தில் பல குழப்பங்களை ஏற்படுத்தக் கூடியது.

ஆகவே, மக்களுக்கு உரியதாக இருக்கும் இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் முறைமையை பலதரப்புகளின் இணக்கத்தோடு மாற்றி அமைக்கும் நடவடிக்கைகளை இப்போது இருந்தே புதிய அரசு தொடங்க வேண்டும்.

இப்போது தெரிவாகும் உள்ளூராட்சி சபைகள் தங்கள் பதவிக்காலத்தை முடிக்கும் போது, அடுத்த தேர்தல் என்றதும் அச்சமயத்தில் தேர்தல் முறையை மாற்ற முயற்சி எடுப்பது குழப்பங்களை ஏற்படுத்தும். ஆகவே உள்ளூராட்சி தேர்தல் முறைமைகளையும் மாற்றி அமைக்கும் - யதார்த்த பூர்வமாக சாத்தியமாகக் கூடிய முறைமையை ஏற்படுத்துவது - ஊன்றிக் கவனித்து நேரத்துடனேயே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

ஏழு, எட்டு ஆண்டுகளாக நடைபெறாமல் இழுபடும் மாகாண சபைத் தேர்தல் முறைமையையும் கூட விரைந்து மாற்றி அமைப்பதற்கான திட்டங்கள் பற்றியும் அவசரமாக கலந்துரையாடி முடிவெடுக்க வேண் டியது கட்சிகளின் பொறுப்பாகும். இப்போதைய ஆட்சி பீடம் இந்தப் பணியைக் கவனம் செலுத்தி முன்னெடுக்குமோ தெரியவில்லை.





# ஐகோனிக் யூத்ஸ் அமைப்பின் இப்தார்!

(றிஸ்வான் சாலிஹு)


ஐகோனிக் யூத்ஸ் அமைப்பின் வருடாந்த இப்தார் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்று அய்னா பீச் கார்டனில் அமைப்பின் தலைவர் முஹம்மட் தில்சானின் வழிகாட்டலில், செயலாளர் அப்றத் அஹமட்டின் தலைமையில் நடைபெற்றது.

இந்த இப்தார் நிகழ்வில் அமைப்பின் நிர்வாக சபை உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், ஆலோசனைச் சபை உறுப்பினர்கள், இந்தப் பிரதேசத்தில் உள்ள சமூக நிறுவனங்களுடைய தலைமைகள், உலமாக்கள், புத்திஜீவிகள், சமூக செயற்பாட்டாளர்கள் என 150 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

அமைப்பால் கடந்த காலத்தில் இந்தப் பிரதேசத்தில் செய்யப்பட்ட செயற்பாடுகள் பற்றி அமைப்பின் தவிசாளர் சிமாம் முஸ்தாக் நினைவுபடுத்தினார். எதிர்காலத்தில் இந்த அமைப்பு மூவின மக்களுக்கும் செய்யவுள்ள செயற்றிட்டம் மற்றும் இளைஞர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு போன்ற எதிர்கால திட்டங்களையும் அமைப்பின் செயலாளர் அப்றத் அஹமட் இதில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் தெரிவித்தார் .






EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# இலங்கையில் சமீப காலமாக பதின்ம வயது கர்ப்பம் அதிகரிப்பு

## மகப்பேற்று வைத்திய நிபுணர் ரகுராம் தெரிவிப்பு



கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது சமீப காலமாக பதின்ம வயது கர்ப்பம் என்பது இலங்கையை பொறுத் தளவில் சற்று அதிகரித்துள்ளது. பதின்ம வயது கர்ப்பம் என்பது நிகழும்போது தாய்க்கும், சேய்க்கும், சமூகத்துக்கும் பல பிரச்சினைகளை ஏற்படும்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளரும், பெண் நோயியல் மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணருமான எஸ்.ரகுராம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

ஒரு பதின்ம வயதுப் பெண் சரி யாக முதிர்ச்சி அடையாமல், தனது தேவைகளை சரியா அறிந்துகொள் ளாமல், கல்வியறிவு போதியளவு இல்லாமலும் இருக்கலாம். இவ்வாறான சூழ்நிலையில் கர்ப்பத்தைச் சுமக்கும் போது உடல் ரீதியாகவும், உள ரீதியா கவும் ஆயத்தப்படுத்தும் தன்மை போதாமல் இருக்கிறது. இது குறித்த பெண்ணுக்கு உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

பதின்ம வயதுடைய தாய்க்கு குருதிச் சோகை, உயர் குருதி அழுத்தம், நீரிழிவு போன்றன ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. குழந்தையை சரியான விதத்தில் கவனிக்காத பட்சத்தில் அந்த குழந்தை நிறை குறைவாக பிறக்கின்ற சந்தர்ப்பங்கள் உள்ளன. அந்தக் குழந்தைக்குப் பின்னாளில் சில சில பிரச்சினைகளும் ஏற்படலாம்.

சமூகத்திலே 16,17,18 வயது களை கொண்ட பெண்கள் கர்ப்பம டையும்போது வித்தியாசமாவும், வர வேற்கப்படாத விடயமாகவும்தான் பார்க்கப்படுகிறது. ஆகையால் அவர் கள் சரியான பராமரிப்புகளையோ, சேவைகளையே குடும்பத்திடமிருந்தோ, நண்பர்களிடமிருந்தோ, சமூகத்திடமி ருந்தோ எடுத்துக் கொள்ள மாட்டார்கள். இவ்வாறாக காணப்படும் போது அவர் களுக்கு ஒரு உளவியல் தாக்கம் ஏற்படும்.

இன்னும் ஒரு விடயம் என்னவென் றால் பதின்ம வயதுப் பெண்கள் திரு மணம் ஆவதற்கு முன்னர் கர்ப்பம டைகின்றனர். திருமணம் ஆவதற்கு முன்பு கர்ப்பமடையும்போது அந்த கர்ப்பத்தை அழித்தல் போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவார்கள். இலங்கையை பொறுத்தவரை கர்ப்பம் அழித்தல் என்பது சட்டவிரோதமானது. இவ்வாறான சட்டவிரோத செயல்களில் ஈடுபடும்போது அதுவும் அவர்களிடத்தில் உடல், உள தாக்கத்தை ஏற்படுத்தும்.

பதின்ம வயது பெண்கள் திரு மணமாகியோ அல்லது திருமணம் ஆகாமலோ இருக்கும்போது குழந் தைக்காக அவர்கள் முயற்சிப்பதை தடுக்க முடியாது. ஆனால் அவர்கள் அதற்கான குடும்ப கட்டுப்பாட்டை பயன்படுத்த முடியும்.

இப்போது இலங்கையை பொறுத்த வரையில் குடும்ப சுகாதார நல மாது என்பவர் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றார். அவர்களை அணுகு வது மிகவும் இலகுவானது. இப்போது ஒவ்வொரு இடங்களிலும் உள்ள வைத்தியசாலைகளில் பெண் நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர்களும் தாராளமாக உள்ளனர். அவர்களிடம் ஆலோசனைகளை பெற முடியும். தங்களுக்கு ஏற்றவாறான கர்ப்பத்தடை முறைகளை பாவிக்க முடியும்.

கர்ப்பத்தடை முறைகளை பாவிப்பது குறித்து நிறைய பிரச்சினைகளும், சந்தேகங்களும் மக்களிடையே காணப் படுகின்றன. கர்ப்பத்தடை முறைகள் மிகவும் பாதுகாப்பானதும், மிகவும் பயனுள்ளதுமான விடயமும் ஆகும். கர்ப்பத்தடை முறைகளை பயன் படுத்தி நிறுத்திய பின்னர் அவர்கள் கர்ப்பமடைவதற்கு நிறைய சந்தர்ப் பங்கள் காணப்படுகின்றன. எந்த விதமான பிரச்சினைகளும் இல்லாமல் கர்ப்பமடைவார்கள்.

பதின்ம வயது பெண்ணொருவர் கர்ப்பமடைந்தால் அதனை அழிக் கவோ, சட்டவிரோத செயல்களில் ஈடுபடவோ கூடாது. இலங்கையை பொறுத்தவரையில் தாய் – சேயுடன் இருக்கின்றபோது கருக்கலைப்பு செய்கின்ற நிலைகள் இருக்கின்றது. இது சட்டவிரோதமானது. இதனால் கிருமிகள் பாதிப்பு ஏற்படலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அருகில் உள்ள அரச வைத்தியசா லையை நாடும் போது அங்கு சகல விதமான சேவைகளும் வழங்கப்படும். அந்தரங்கத்தன்மை பேணப்பட்டு, காத்திரமான சேவை வழங்கப்படும். சரியான முறையில் அவர்கள் இந்த சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

ஆகவே இந்த பதின்ம வயது கர்ப்பம் என்பது தாய்மார்களிடத்தும், பெண்களிடத்தும், சமூகத்திலும் பல்வேறு வகையான பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே நாங்கள் இது குறித்து சரியான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.– என்றார்.







# சர்வதேச நீர் தினத்தை முன்னிட்டு விவசாயிகளின் விசேட பொங்கல்

(ஹஸ்பர் ஏ.எச்.)

சர்வதேச நீர் தினம் மார்ச் 22 ஆம் திகதி ஆகும். இதனை முன்னிட்டு தம்பலகாமம் விவசாய சம்மேளனங்கள் இணைந்து விசேட பொங்கல் விழாவை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த நிகழ்வு நேற்று (24) தம்பலகாமம் பிரதேச செயலர் பகுதியில் உள்ள வெம்பு நாகம்மாள் கோயிலில் இடம்பெற்றது. இதன் போது விசேட பூஜைகள் இடம் பெற்று பொங்கல் விழா இடம்பெற்றது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி, தம்பலகாமம் கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், கந்தளாய் பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனங்களின் பிரதி நிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# மனித பாவனைக்கு ஒவ்வாத குளிர்பானம் மீட்கப்பட்டது!

## 20 ஆயிரம் தண்டம் அறவீடு!!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக எல்லைக்கு உட்பட்ட சம்மாந்துறை 01 பகுதியில் மனித பாவனைக்கு தீங்கு விளைவிக்கும் குளிர்பானங்கள் இருப்பதாக தகவல் கிடைக்கப்பெற்றது.

குறித்த தகவலுக்கு அமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத்தின் ஆலோசனையின் பேரில் சம்மாந்துறை 01 பகுதிக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் டி. தினேஸால் அங்கு குளிர்பானம் கைப்பற்றப்பட்டு அரச பகுப்பாய்வு திணைக்களத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

அரச பகுப்பாய்வு திணைக்களத்தால் குளிர்பானம் தொடர்பான அறிக்கையில் அனுமதிக்கப்படாத நிறமூட்டி, அனுமதிக்கப்படாத பாதுகாக்கும் இரசாயனம் கொண்டிருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து, சம்மாந்துறை நீதிவான் முன்னிலையில் குளிர்பானத்தை விற்பனை செய்த கடை உரிமையாளருக்கும் அதனை உற்பத்தி செய்தவரையும் ஆஜர் படுத்திய போது இருவருக்கும் எதிராக 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது. எச்சரிக்கையையும் செய்யப்பட்டது.

இந்தச் சோதனை நடவடிக்கையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.என்.எம். பைலான் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டனர்.



# மகளிர் தினத்தை முன்னிட்டு திருமலையில் வலைப்பந்தாட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

மகளிர் தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் இயங்கிவரும் 'ஈவின்ஸ்' பெண்களுக்கான சுதந்திர அமைப்பால் "பெண்களும் மைதானத்தை பயன்படுத்தும் உரிமை உண்டு" என்ற கருப்பொருளில் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி நடத்தப்பட்டது.

வருடந்தோறும் கிராமமட்ட பெண்கள் அமைப்புகளுக்கு இடையில் நடத்தப்படும் இந்தச் சுற்றுப் போட்டியில் இந்த முறை 7 அணிகள் பங்கு பற்றிய போட்டி திருகோணமலை மக்கேய்சர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் இலுப்பைக்குளத்தை பிரதிநிதித்துவபடுத்தி பங்குபற்றிய விக்டர் அணியினர் வெற்றி கிண்ணத்தை சுவீகரித்தனர்.

இதன்போது வெற்றியீட்டிய அணியினருக்கு கேடயங்களும் பரிசில்களாக வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வின் பிரதம அதிதிகளாக பெண்கள் சிறுவர்கள் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி ஏ.என்.ஜெயமாலி மற்றும் சட்டத்தரணி பிரபாலினி குலசேகரன், ஈவின்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் திருமதி காயத்திரி நளினகாந்தன், மேக்கன்டைன் வங்கி நிறுவனத்தின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.





# புத்தளம் அல் நிஷா மகளிர் சங்க மகளிர் தினமும் இப்தார் நிகழ்வும்



(கற்பிட்டி எம்.எச்.எம். சியாஜ்)

புத்தளம் அல் நிஷா மகளிர் சங்கத்தின் மகளிர் தின நிகழ்வுகள் அல் நிஷா மகளிர் சங்க கட்டடத்தில் நடைபெற்றன.

இதன் போது அல் நிஷா அமைப்பின் உறுப்பினர்கள் 10 பேருக்கு சுய தொழிலுக்காக வேண்டி தலா 10 ஆயிரம் ரூபா நன்கொடையாகவும், மேலும் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்கள் இரண்டும் சுயதொழில் முன்னேற்றத்துக்காக வழங்கி வைக்கப்பட்டன.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களின் முன்னேற்றதுக்காக மேற்கொள்ளப்பட்ட சிறந்த செயற்பாடாக இது அமைந்துள்ளது.

இதன் போது அல் நிஷா மகளிர் அமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கான நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# நுவரெலியாவில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா !



(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நுவரெலியா லங்காதீஸ்வரர் ஆலய காயத்ரிபீட மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காயத்ரி சித்தர் ஸ்ரீ முருகேசு சுவாமிகளின் ஆசியோடு ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாக் கிரியைகள் யாவும் 06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆரம்பமாகும் என்று ஆலய அறங்காவலர் நிர்வாகி சக்திவேல் சந்திரமோகன் தெரிவித்தார்.

108 பாணலிங்க பஞ்சகுண்ட பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக பெருவிழாவின் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு 08 ஆம் 9 ஆம் ஆம் திகதிகளில் காலை முதல் மாலை வரை நடைபெறும்.



# கிளிநொச்சி வடக்கு வலய பாடசாலைகளது மாணவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி

இரட்ணம் பவுண்டேஷன் மற்றும் சொல்வ் பவுண்டேஷன் நிறுவனங்களின் நிதி அனுசரணையில், விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ட் நிறுவனத்தால் கிளிநொச்சி வடக்கு வலயத்துக்கு உட்பட்ட நான்கு பாடசாலைகளின் மாணவர்களுக்கான ஐந்து நாள்கள் தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

தர்மபுரம் அ.த.க. பாடாசலையில் இடம்பெற்ற இந்த தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறையில் கிளிநொச்சி, முருகானந்தா கல்லூரி, பரந்தன் இந்துக் கல்லூரி, தர்மபுரம் மத்திய கல்லூரி மற்றும் கண்டாவளை மகா வித்தியாலயம் பாடசாலைகளைச் சார்ந்த 37 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தலைமைத்துவம் சார்ந்த பங்கேற்றல் முறை செயற்பாடுகள் வழியில் அவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

மாணவர்களை சுய விழிப்புணர்வு, தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், தலைமைத்துவம், குழுச் செயற்பாடு, தொடர்பாடல், திட்டமிடல், நேர முகாமைத்துவம் மற்றும் முன்வைப்பு திறன் சார்ந்த திறன் விருத்திக்கும், தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்கை தொடர்பான ஊக்குவிப்புக்கும் இந்தப் பயிற்சி ஒரு வாய்ப்பாக அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில், பாடசாலை மாணவர்கள் சிறந்த முறையில் தங்களது தலைமைத்துவம் சார்ந்த துலங்கல்களை வெளிப்படுத்தியிருந்தனர். குறிப்பாக, பயிற்சியின் பின்னர் மாணவர்கள் தங்களது மனக் கிடக்கைகளை தயக்கமின்றி வெளிப்படுத்தும் திறன் அதிகரித்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டது.

கிளிநொச்சி வடக்கு வலயத்தின் ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புடன், கலாநிதி இரட்ணம் நித்தியானந்தனின் வழிகாட்டலில் நடத்தப்பட்ட இந்த பயிற்சி பட்டறையில், விசன்ஸ் நிறுவனத்தின் தலைவர் ந.தெய்வேந்திரராஜா, பிரதம நிறைவேற்று அதிகாரி அ.மயூரன் ஆகியோர் பிரதம வளவாளர்களாகவும், விசன்ஸ் நிறுவனத்தின் நான்கு பயிற்சியாளர்கள் வளவாளர்களாகவும் செயற்பட்டனர்.









# அம்பாறை மாவட்ட செயலக வருடாந்த இப்தார் நிகழ்வுகள்

(சர்ஜூன் லாபீர்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வு அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் மாவட்ட செயலக முன்றலில் நேற்று (24) நடைபெற்றது.

சமூக நல்லிணக்க இப்தாராக இடம்பெற்ற இந்த நிகழ்வில் நோன்பின் மாண்புகளை பற்றி மௌலவி சஹ்றான் ஹஸன் மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் திகவாபி விகாராதிபதி பேதி வேல சந்தானந்த நாயக்க, கல்முனை சிவஸ்ரீ க.வி பிரமின் குருக்கள், அம்பாறை மேதடிஸ் ஆலய அருட் தந்தை ரோகான் அப்பு காமி உட்பட மத போதகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.ஜெகராஜன், அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்க, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஏ முனாசீர், பிரதம கணக்காளர் ஏ.எம்.எம் மஹ்ரூப், பிரதம பொறியியலாளர் ஏ.பி.எம் சாஹீர், மாவட்ட கணக்காளர் ஐ.எம். பாரீஸ், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி. அனீஸ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயளாலர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வு மாவட்ட செயலக முஸ்லிம் மஜ்லிஸின் நெறிப்படுத்தலிலும் ஒழுங்குபடுத்தலிலும் நடைபெற்றது.

# அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனையில் பெண்களுக்கு பொதிகள் வழங்கி வைப்பு





(எம். எப்.நவாஸ்)

உலக அவசர நிதி உதவி திட்டத்தின் கீழ் ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தால் ஒதுக் கப்பட்ட நிதி உதவியின் மூலம் வறு மையுள்ள அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் சுமார் 400 பெண் முதியோர்களுக்கான அத்தியாவசிய பொருள்கள் அடங் கிய பொதிகள், மற்றும் மாற்று திறனா ளிகளுக்கான உபகரணங்கள் என்பன பிரதேச செயலகங்களின் கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ. எம்.அன்சார், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பீ.ரீ.எம். இர்பான் மற்றும் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம். எம் .நசீர், உதவிப் பிரதேச செயலாளர் வை.றாஸித், திட்டமிடல் பணிப்பாளர்கள் ஏ. எம். தமீம், ஏ. எம்.மஜீட், சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் ஏ.எல்.பைசாத், ஏ. ஜி. அர்சாத் ஹெல்ப் ஏஜ் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட தலைவர் எம்.எஸ். சமிந்த டீ சில்வா, ஆய்வாளர் தரங்க திசாநாயக்க, நிகழ்ச்சித் திட்ட ஒருங் கிணைப்பாளர் கீதா பெனான்ட, கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளர் ஜே எம் ரீ. தனஞ்சய பண்டார, சமூக சேவை பிரிவின் பிரதம முகாமை உத்தி யோகத்தர்கள், முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# சவுக்கு சங்கரின் தாயார் அளித்த புகார் மீது சி.பி.சி.ஐ.டி. விசாரணை

சென்னையில் நேற்று சவுக்கு சங்கர் வீட்டில் நடந்த சம்பவத்தை அடுத்து அவரது தயார் கமலா, கீழ்ப்பாக்கம் பொலிஸ் நிலையத்தில் அது தொடர்பாக புகார் அளித்திருந்தார். இந்த நிலையில், இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றி உள்ளதாக தமிழக பொலிஸ் தெரிவித்துள்ளது.

சென்னை - கீழ்ப்பாக்கம், தாமோதரமூர்த்தி தெருவில் வசித்து வரும் ஆச்சிமுத்துவின் மனைவியான கமலா (வயது 68) என்பவர் தன் வீட்டில் சுமார் 20 பேர் கொண்ட ஒரு கும்பல் நுழைந்து, தன்னை அவதூறாக பேசியதோடு, கழிவு நீரை வீசி வீட்டை மாசுபடுத்தி, தனக்கு மிரட்டல் விடுத்ததாக கூறி கீழ்ப்பாக்கம் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இந்த சம்பவத்துக்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அவர் கூறியுள்ளார். இந்த புகார் தொடர்பாக கீழ்ப்பாக்கம் பொலிஸ் நிலையத்தில் மனுவாக பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், புகார்தாரர் கமலாவின் மகனும், யூடியூபருமான சங்கர் என்கிற சவுக்கு சங்கர். தனது பேட்டியில் சென்னை பெருநகர காவல் துறையினரையும், பொலிஸ் ஆணையரையும் குறித்து சில குற்றச்சாட்டுகளை முன்வைத்தார் என தகவல் வெளியாகியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, சென்னை பெருநகர பொலிஸ் ஆணையர் தனது வேண்டுதலில் மேற்படி மனு மீதான



விசாரணையை மற்றொரு விசாரணை அமைப்புக்கு மாற்றுமாறு பரிந்துரை செய்தார். இதன் அடிப்படையில், மேற்கண்ட பொலிஸ் நிலைய மனு மேல் விசாரணைக்காக சி.பி.சி.ஐ.டி. (குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு) மாற்றம் செய்யப்பட்டுள்ளது' என தமிழக பொலிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சவுக்கு சங்கர் வீட்டில் நடந்த அத்து மீறல் சம்பவத்துக்கு எடப்பாடி பழனிசாமி, அண்ணாமலை, திருமாவளவன், வைகோ உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# எந்த மாநிலம் மீதும் மொழியும் திணிக்கப்படாது: மக்களவையில் மத்திய இணை அமைச்சர் உறுதி

"மும்மொழிக் கொள்கை அதிக நெகிழ்வுத்தன்மை உடையதாக இருக்கிறது. அதாவது. எந்த மாநிலத்தின் மீதும் எந்த மொழியும் திணிக்கப்படாது,"

- இவ்வாறு தி.மு.க எம்.பி. கனிமொழி எழுப்பிய கேள்விக்கு மத்திய கல்வி இணை அமைச்சர் ஜெயந்த் சௌத்ரி பதிலளித்துள்ளார்.

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி எம்.பி., கல்வித் துறை தொடர்பான சில கேள்விகளை எழுத்துபூர்வமாக கேட்டிருந்தார். அதில், "நாடு முழுவதும் மும்மொழிக் கொள்கையின் கீழ் மாநில வாரியாக கற்பிக்கப்படும் மொழிகளின் விவரங்கள் என்னென்ன? இந்த மொழிகளைப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் என்ன? இந்தி பேசும் மாநிலங்களில் இந்தி அல்லாத இந்திய மொழிகளைப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை மாநில வாரியாக என்ன?

தமிழகத்தில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தற்போது பணிபுரியும் தமிழ், இந்தி மற்றும் சமஸ்கிருத ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு? மாணவர்களுக்கு தாய்மொழிகளில் கற்பிக்க கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் ஏதேனும் திட்டங்களை வகுத்துள்ளதா? அவ்வாறு இருப்பின், அதன் விவரங்கள் என்ன? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?" என்பது உள்ளிட்ட கேள்விகளைக் கேட்டிருந்தார்.





இதற்கு மத்திய கல்வித் துறையின் இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி அளித்த பதிலில்,

"தேசிய கல்விக் கொள்கையின் பத்தி எண் 4.13 இல், அரசமைப்பு விதிகளைக் கருத்தில் கொண்டு மக்கள், மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் விருப்பங்கள் மற்றும் பன்மொழித் தன்மையை மேம்படுத்துவதன் அவசியம், தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவதை மனதில் கொண்டு மும்மொழிக் கொள்கை தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று கூறுகிறது.

எனினும், மும்மொழிக் கொள்கை அதிக நெகிழ்வுத்தன்மை உடையதாக இருக்கிறது. அதாவது, எந்த மாநிலத்தின் மீதும் எந்த மொழியும் திணிக்கப்படாது. மூன்று மொழிகளில் குறைந்தது இரண்டு, இந்தியாவை பூர்விகமாகக் கொண்டதாக இருக்கும் வரை குழந்தைகள் கற்றுக்கொள்ளும் மூன்று மொழிகளும் மாநிலங்களுடைய தேர்வாகவே இருக்கும். இன்னும் சொல்லப் போனால் நிச்சயமாக மாணவர்களின் விருப்பங்களாக இருக்கும்.

குறிப்பாக, தாங்கள் படிக்கும் மூன்று மொழிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றை மாற்ற விரும்பும் மாணவர்கள், மேல்நிலைப் பள்ளியின் இறுதிக்குள் (இலக்கிய மட்டத்தில் இந்தியாவின் ஒரு மொழி உட்பட) அடிப்படைத் தேர்ச்சியை நிரூபிக்க முடிந்தால், 6 அல்லது 7 ஆம் வகுப்பில் அவ்வாறு செய்யலாம். புதிய கல்விக் கொள்கை 2020 இன் தொடர்ச்சியாக, பள்ளிக் கல்விக்கான தேசிய பாடத்திட்டக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவில் மொழிக் கல்வி குறித்த முன்னேற்றத்துக்கான வழிகாட்டுதலை வழங்குகிறது. " என்று அமைச்சர் பதிலளித்துள்ளார்.



# பங்களாதேஷில் இராணுவத்தினரை எதிர்த்து மாணவர்கள் போராட்டம்

பங்களாதேஷ் இராணுவம், அரசியலில் தலையிடுவதாகக் குற்றஞ்சாட்டி மாணவர்கள் தலைமையிலான புதிய அரசியல் கட்சி இராணுவத்திற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் பங்களாதேஷில் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுத்த மாணவர்கள் ஒன்றிணைந்து, தேசிய குடிமக்கள் கட்சி என்ற புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்தனர் .

இந்நிலையில், பங்களாதேஷ் அரசியலில் அந்நாட்டு இராணுவம் குறுக்கிடுவதாக அக்கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தேசிய குடிமக்கள் கட்சியின் தலைவர் ஹஸ்னத் அப்துல்லா, இது தொடர்பாக தன் சமூக வலைத்தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அதில் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியை, இந்தியாவின் ஆதரவுடன் மறுசீரமைக்கப்பட்ட புதிய கட்சியாக செயற்படுத்துவதற்கு முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன .

இவ்விடயம் தொடர்பாக கடந்த 11ஆம் திகதி தங்களை அழைத்து இராணுவத்தினர் கலந்துரையாடினர் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் இராணுவத்தினர் அவர்கள் கட்டுப்பாடுக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து மட்டுமே தங்கள் பணியை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டுக்குள் நுழைந்து அரசியலில் தலையிடக் கூடாது. அதை நாங்கள் அனுமதிக்கவும் மாட்டோம், என்றும் அவர் அந்த பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

இதனை தொடர்ந்து பங்களாதேஷ் இராணுவத்தினரை எதிர்த்து அவர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# பாகிஸ்தானில் தட்டம்மையால் 17 குழந்தைகள் உயிரிழப்பு!

பாகிஸ்தானின் சிந்த் மாவட்டத்தில் கடந்த 2 மாதங்களில் தட்டம்மை நோயினால் 17 குழந்தைகள் உயிரிழந்தனர் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 8 ஆம் திகதி வரை தட்டம்மை பாதிப்பு பற்றி சிந்த் சுகாதார துறை கணக்கெடுப்பு ஒன்றை நடத்தியது.

இதில், 1,100 க்கும் மேற்பட்டோர் தட்டம்மை நோய்ப் பாதிப்புக்குள்ளானது தெரிய வந்தது.

இந்த நிலையில், காயிர்பூர் மாவட்டத்தில் 10 குழந்தைகள் இந்த நோயினால் உயிரிழந்தன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கராச்சியில் கடந்த 2 மாதங்களில் மொத்தம் 550 குழந்தைகள் தட்டம்மை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# எகிப்திய பிரமிட்டுக்களுக்கு அடியில் மிகப்பெரிய நிலத்தடி நகரம் கண்டுபிடிப்பு

பிரமிட்டுகளுக்கு அடியில் 2,100 அடிகள் மேல் பரந்து விரிந்துள்ள எட்டு தனித்துவமான செங்குத்து உருளை வடிவில் கலைப்பொருள்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இது தவிர, கிசாவில் உள்ள புகழ்பெற்ற எகிப்திய பிரமிட்டுக்களுக்கு அடியில் 'மிகப்பெரிய நிலத்தடி நகரம் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.



ரேடார் கருவிகளின் உதவியுடன் ஆயிரக்கணக்கான அடி ஆழத்தில் தெளிவுத் திறனுடனான புகைப்படிவங்கள் பெறப்பட்டுள்ளன.

ஸ்கொட்லாந்து பல்கலைக் கழகத்தின் நிபுணர் மற்றும் இத்தாலியில் உள்ள பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானி ஆகியோரே இந்த பயணத்திற்குத் தலைமை தாங்கியுள்ளனர்.

இந்தநிலையில், பல தொல் பொருள் நிபுணர்கள் இந்த கூற்றினை மறுத்து அவை அனைத்தும் போலி செய்திகள் எனக் குற்றம் சாட்டியுள்ளனர்.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 25/03/2025

## தீ விபத்தில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு

கால்கரி நகரின் வடகிழக்கு பகுதியான ஃபால்கன்ரிட்ஜில் வீடு தீப்பற்றியதில் ஒருவர் உயிரிழந்தார், ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 03▶



# நாட்டை யார் வழி நடத்த வேண்டும் என்பதில் கனடா மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்

## பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு

**தற்போதைய முக்கியமான தருணத்தில் நாட்டை யார் வழி நடத்த வேண்டும் என்பதில் கனடா மக்கள் தெளிவாக இருக்கிறார்கள் என்று பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

**கனடாவில் ஏப்ரல் 28ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் நடத்த இருப்பதாக பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

**நேற்று முன்தினம் அவர் ஒட்டாவில் உள்ள ரிடோ ஹாலில் ஆளுநர் ஜெனரல் மேரி சைமனை சந்தித்து நாடாளுமன்றத்தை கலைக்க பரிந்துரை செய்துள்ளார்.**

கனடா நாடாளுமன்றத்தின் பதவி காலம் வருகிற ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி வரை உள்ளது.

கனடாவுக்கு எதிராக அமெரிக்காவின் நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் நாடாளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது.

அமெரிக்காவில் டொனால்ட் ட்ரம்ப் புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்ற பிறகு கனடாவுக்கான அனைத்து உதவிகளும் நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் கனடாவுக்கு அதிக வரி விதிக்கப்போவதாகவும், அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக கனடா சேர்க்கப்படும் என்றும் ட்ரம்ப் மிரட்டல் விடுத்து வருகின்றார்.

ஆனால் மார்க் கார்னிக்கு கட்சிக்குள்ளும், பொதுமக்கள் மத்தியிலும் ஆதரவு பெருகி வருவதால் அவர் இந்த நடவடிக்கையை 03▶

# கனடாவில் நிகழவிருக்கும் இரட்டை சூரிய உதயம்

எதிர்வரும் மார்ச் 29 ஆம் திகதி வட அமெரிக்காவில் ஒரு பகுதி சூரிய கிரகணம் காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, அமெரிக்காவின் வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் அட்லாண்டிக் கனடா பகுதிகளில் இது சூரியன் உதயமாகும் நேரத்தில் காணக்கூடிய சிறப்பு நிகழ்வாக காணப்படும்.

இந்த பகுதி கிரகணத்தின் போது, சில பகுதிகளில் "இரட்டை சூரிய உதயம்" (Double Sunrise) என்ற அபூர்வமான நிகழ்வை பார்க்கலாம்.

இதில், சூரியன் உதயமாகும் போது, மூன்றில் இரண்டு பகுதி நிலவால் மறைக்கப்படும்.இதனால், சில இடங்களில் 'சூரிய கொம்புகள்' என அழைக்கப்படும் விசித்திரமான தோற்றம் உருவாகும்.

கனடாவில் Forestville மற்றும் Saint Andrews ஆகிய



இரண்டு இடங்களில் இந்த அதிசய நிகழ்வைக் காண முடியும்.

மேலும், பாதுகாப்பான சூரியக் கண்ணாடிகளை பயன்படுத்தி, கண்களுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் கிரகணத்தைக் காணலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


மார்க் கார்னி


பைரர் பொய்லிவ்ரே

## கனடாவின் கூட்டாட்சித் தேர்தல்:

# களமிறங்குகின்றனர் முக்கிய வேட்பாளர்கள்!

எதிர்வரும் ஏப்ரல் 28ஆம் திகதி, கனடாவின் கூட்டாட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு அதிகாரப்பூர்வமாக நடைபெறவுள்ளது.

கனடாவின் இந்த கூட்டாட்சி தேர்தலில், கனடாவின் தற்போதைய பிரதமர் மார்க் கார்னி, கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பைரர் பொய்லிவ்ரே, பிளாக் கியூபெகோயிஸ் கட்சியின் தலைவர் யவ்ஸ்-ஃபிராங்கோயிஸ் பிளான்செட் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஜக்மீத் சிங் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

### மார்க் கார்னி

அதன்படி, கனடாவின் தற்போதைய பிரதமராக உள்ள மார்க் கார்னி, இந்த தேர்தலில் போட்டியிடுகின்றார்.

இந்த மாத தொடக்கத்தில் ஜஸ்டின் ட்ரூடோவுக்குப் பிறகு லிபரல் தலைவராக பதவியேற்க அவரது கட்சி, 80 வீதத்திற் கும் அதிகமான வாக்குகளுடன் அவரைப் பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுத்தது.

ட்ரூடோவின் பதவி விலகலை தொடர்ந்து, அவர் சிறிது காலத்திலேயே பிரதமரானார். கனடா மற்றும் பிரித்தானியாவில் உள்ள பலருக்கு, கார்னி ஒரு பரிச்சயமானவர்.

அவர் கனடா மற்றும் பிரித்தானிய வங்கிகள் இரண்டிற்கும் தலைவராக இருந்தார், 2008ஆம் ஆண்டு நிதி நெருக்கடியின் போதும், பிரெக்ஸிட்டின் போதும் வங்கிகளில் பணியாற்றினார்.

அவர் வடமேற்கு பிரதேசங்களின் ஃபோர்ட் ஸ்மித்தில் பிறந்த அவரே, வடக்கிலிருந்து வந்த முதல் கனேடிய பிரதமரானார்.

கார்னி, ஆல்பர்ட்டாவின் எட்மண்டனில் வளர்ந்து பின்னர் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திலும் பின்னர் ஆக்ஸ்போர்டிலும் சேர்ந்து பொருளாதாரம் பயின்றார். கார்னி தனது நிதி நிபுணத்துவத்திற்காகப் பலர் மத்தியில் பாராட்டுக்களை பெற்றவர்.

### பைரர் பொய்லிவ்ரே

45 வயதான பொய்லிவ்ரே, ஆல்பர்ட்டாவின் கால்கரியைச் சேர்ந்தவர். அவர் கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களாக கனேடிய அரசியலில் இருந்து வருகிறார்.

25 வயதில் முதன்முதலில் ஹவுஸ் ஆஃப் காமன்ஸுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார், அந்த நேரத்தில் இளைய எம்.பி.க்களில் ஒருவராக ஆனார். அப்போதிருந்து, கனடாவில் குறைந்த வரி, சிறிய அரசாங்கத்திற்காக அவர் தொடர்ந்து வாதிட்டு வருகிறார்.

அவர் தனது மோதல் பாணி அரசியலுக்கு பெயர் பெற்றவர். சமீபத்திய ஆண்டுகளில், பொய்லிவ்ரே தாராளவாதிகள் மற்றும் ட்ரூடோவை சளைக்காமல் தாக்கி வருகிறார்.

### யவ்ஸ்-ஃபிராங்கோயிஸ் பிளான்செட்

பிளாக் கியூபெகோயிஸ் என்பது ஒரு கியூபெக் தேசியவாதக் கட்சியாகும், இது பிரெஞ்சு மொழி பேசும் மாகாணத்தில் மட்டுமே வேட்பாளர்களை களமிறக்குகின்றது.

அதாவது அதன் தலைவர் கனடாவின் அடுத்த பிரதமராக வருவதற்கான வாய்ப்புகள் குறைவு. இருப்பினும், அவர்கள் கனேடிய தேர்தல்களில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

மேலும் கியூபெக்கில் அவர்களின் புகழ் அரசாங்கத்தை அமைக்க விரும்பும் மற்ற முக்கிய கட்சிகளின் தலைவிதியை தீர்மானிக்கக்கூடும். அக்கட்சியின் தலைவர், யவ்ஸ்-ஃபிராங்கோயிஸ் பிளான்செட் 2019ஆம் ஆண்டு முதல் கட்சியை வழிநடத்தி வருகிறார்.

ட்ரம்பின் 51ஆவது மாநில சொல்லாட்சியை முட்டாள்தனம் என்று கூறும் அவர், தனது வெளிப்படையான தன்மைக்கு பெயர் பெற்றவர்.

### ஜக்மீத் சிங்

இறுதியாக, 46 வயதான ஜக்மீத் சிங், பாரம்பரியமாக தொழிலாளர் மற்றும் தொழிலாளர் பிரச்சினைகளில் கவனம் செலுத்தும் இடதுசாரி சார்பு கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவராக உள்ளார்.

கனடாவில் ஒரு பெரிய அரசியல் கட்சியை வழிநடத்தும் முதல் இன சிறுபான்மையினரும் சீக்கிய மதத்தைச் சேர்ந்தவருமான அவர் 2017ஆம் ஆண்டில் வரலாற்றை உருவாக்கினார்.

2019ஆம் ஆண்டில், முன்னாள் குற்றவியல் பாதுகாப்பு வழக்கறிஞர் பிரித்தானியாவின் கொலம்பியாவில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், அன்றிலிருந்து அவர் பொதுப் பதவியில் பணியாற்றி வருகிறார்.


யவ்ஸ்-ஃபிராங்கோயிஸ் பிளான்செட்


ஜக்மீத் சிங்



# கனடாவின் சென் கத்தரின்ஸ் நகரில் துப்பாக்கிச் சூடு; ஒருவர் உயிரிழப்பு

சென் கத்தரின்ஸ் நகரில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கார்ல்டன் வீதி மற்றும் அத்லோன் பிளேஸ் அருகே (குவீன் எலிசபெத் வேயின் அருகில்) இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்திற்கான சூழ்நிலை தெளிவாக தெரியவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.



இந்நிலையில், எந்த சந்தேகத் தையும் பொலிஸார் இதுவரை வெளி யிடவில்லை, மேலும் ஒருவர் கூட கைது செய்யப்படவில்லை.

விசாரணை முன்னெடுக்கப்பட் டுள்ளதால், சம்பவ இடத்தில் அதிக பொலிஸார் குவிக்கப் பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.





## தீ விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கால்கரி நகரின் வடகிழக்கு பகுதி யிலுள்ள 70 பிளாக் ஃபால்வுட் பிளேஸ் N.E. பகுதியில் உள்ள ஒரு மாடி வீட்டில் தீ ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்படுத்தியதன் பிறகு, வீட்டில் இருந்து மூன்று குடியிருப்பாளர்கள் மீட்கப்பட்டனர். இரண்டு நாய்களும் மீட்கப்பட்டுள்ளன என தெரிவிக் கப்படுகின்றது.

ஒரு ஆண் குடியிருப்பாளர் நாய்களு டன் வெளியேறியிருந்தார், ஆனால் மற்ற இருவர் (ஒரு ஆண், ஒரு பெண்) மீட்கப்பட்டனர்.

அந்த ஆண் நபர் இதயநோயால் அவதிப்பட்ட நிலையில் இருந்தார், மருத்துவ குழுவினர் அவரை மீட்பதற் கான முயற்சிகள் மேற்கொண்டபோதும், அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந் தார். பெண் ஒருவர் தீவிர காயங்க ளுடன் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டார்.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் விசாரணையில் உள்ளது. இந்த தீ விபத்து சம்பந்தமான தகவல், புகைப் படங்கள் அல்லது வீடியோக்களை, குறிப்பாக தீயணைப்பு படையினர் வருவதற்கு முன் எடுக்கப்பட்டவை, piofire@calgary.ca என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு பொதுமக்க ளிடம் கோரப்பட்டுள்ளது.

## நாட்டை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்து உள்ளார்.

இது குறித்து கவர்னர் ஜெனரலை சந்தித்த பிறகு பிரதமர் மார்க் கார்னி கருத்து தெரிவிக்கையில்,

“கனடாவில் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி தேர்தல் நடத்த கவர்னர் ஜெனரல் ஒப்புதல் அளித்து உள்ளார்.

அமெரிக்கா நம்மை சொந்தமாக்கி கொள்ள விரும்புகிறது. ட்ரம்ப் நம்மை பிரிக்க நினைக்கிறார். அதை நடக்க நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

நாம் வலுவான பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். அமெரிக்க ஜனா திபதி ட்ரம்பின் வரிகளை சமாளிக்க வேண்டிய கட்டாயத்தில் கனடா உள்ளது.

இது போன்ற முக்கியமான தரு ணங்களில் நாட்டை யார் வழி நடத்த வேண்டும் என்பதில் கனடா மக்கள் தெளிவாக இருக்கிறார்கள்” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.